
# கலைஞரும் நானும்

110

“திராவிட இயக்கத்தின் தனிப்பெரும் ஆளுமை கலைஞர். அவரது நுட்பமான ஆட்சித்திறனைக் கண்டு வியந்திருக்கிறேன்” என தனது நினைவுகளைப் பகிர்கிறார், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஜெகதீசன்.



# ‘குன்றின் மேல் ஏற்றி வைத்தவர்!’

**முனைவர் ஜெகதீசன், பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயர், நான் அரசியல் அறியத் தொடங்கிய காலத்தில் இருந்தே மனதில் பதிந்த கல்வெட்டுப் பெயர். தமிழ்நாட்டின் மக்கள் ஒவ்வொருவரிடமும், திராவிட அரசியலை வேரூன்றி வளரச் செய்த பெயர். என் வாழ்க்கை வளர்ச்சியும் அவர் பெயர் சொல்லாமல் முழுமையாகாது.

தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில், அவர் காட்டிய அக்கறையை, அவர் காலத்தில் கல்வி நிறுவனங்களில் பொறுப்பு வகித்த அனைவருமே அறிவோம். கல்வியாளர் எனில், எளிதாக அவரை அணுக முடியும். கல்வித்துறையிலும் மிக நுட்பமான தீர்வுகளைச் செயல்படுத்திப் பார்த்தவர் கலைஞர்தான்.

இந்தியாவின் எல்லா கல்வியாளர் பேரவைகளிலும் முதன்மையானதும், சிறப்பு வாய்ந்ததுமான ‘இந்திய வரலாற்றுப் பேரவை’யின் 1996-ஆம் ஆண்டு நடந்த ஆண்டு விழாவுக்கு சென்னை பல்கலைக் கழகம் பொறுப்பேற்றது. மாநாட்டின் அழைப்பாளராக நானும் சில மூத்த கல்வியாளர்களும் இருந்தோம்.

உலகளவிலான அறிஞர்களை உறுப்பினர் களாகக் கொண்டு இயங்கும் அந்தப் பேரவையின், ஆண்டு விழாவினை, ஒவ்வொரு ஆண்டும் ஒரு பல்கலைக் கழகம் பொறுப்பேற்று நடத்தும். அந்த வாய்ப்பு சென்னை பல்கலைக் கழகத்துக்கு 1944-ஆம் ஆண்டு வந்தது. அதன் பின்னர் 1996-ஆம் ஆண்டு ஏற்று நடத்தும் பொறுப்பு மீண்டும் வந்தது.

தொடக்கவிழாவுக்குச் சிறப்புரையாற்ற முதல்வர் கலைஞர் அவர்களை அழைப்பதற்காகத் தலைமைச் செயலகத்தில் அவரது அறையில் சந்தித்தோம். விவரங்களைக் கூறி, தேதி கேட்டோம்.

“என்றைக்கு?” என்றார் அவர். நான், டிசம்பர் 27 என தேதியைக் குறிப்பிட்டேன்.

‘அன்று புதுக்கோட்டையிலும், அதற்கு அடுத்த நாள் மதுரையிலும் ஒரு நிகழ்ச்சி’ என்றார், அவரது செயலாளர்.

தலைவர், சற்று யோசனையுடன் என்னைப் பார்த்தார். நான் சற்று தயக்கத்துடன் “அண்ணே, அந்த அமைப்பின் சட்ட விதிகள்படி, இந்த ஆண்டு விழாவிற்கான நாட்கள் எவை என்பது சென்ற ஆண்டு விழா செயற்குழுக் கூட்டத்திலேயே முடிவு செய்து விடுவார்கள்” என்றேன். அவர் எவ்விதத் தயக்கமும் இன்றி, செயலாளரைப் பார்த்து “புதுக்கோட்டை நிகழ்ச்சியை மறுநாள் காலையில் வைத்துக் கொண்டு, மதுரை நிகழ்ச்சியை அன்று மாலை வைத்துக்கொள்ளச் சொல்லுங்கள்” என்று கூறினார்.

அடுத்து, என்னைப் பார்த்து “எத்தனை மணிக்கு?” எனக் கேட்டார். “பத்து மணிக்கு” என்றேன்.

“நாள் முழுக்க இருக்க வேண்டுமா?”என்றார்.

“அண்ணே, அந்த அமைப்பின் தொடக்க விழா என்பது, ஒன்றே முக்கால் மணி நேரம் மட்டுமே. பங்கு பெறும் ஒவ்வொருவருக்கும் நேரம் முன்பே முழுமையாக வரையறை செய்யப்பட்டு விடும்” என்றேன்.

“அப்படி என்றால். எனக்கு எவ்வளவு நேரம்?” எனக் கேட்டார்.

“அண்ணே, தொடக்க உரைக்கு ஒதுக்கி யிருப்பது 12 நிமிடங்கள்” எனத் தயக்கத்துடன் கூறினேன். ஆனால், அவரோ, எந்த சலனமும் இல்லாமல், “சரி”என்று கூறி புன்னகைத்தார்.



தமிழ் இனத்தையே தம் பேச்சால் கட்டிப்போட்ட, மாபெரும் தலைவர், கேட்கக் கேட்க சலிக்காத பேச்சாளுமை 12 நிமிடங்களுக்கு எந்த மறுப்பும் இல்லாமல் ஒப்புக்கொண்டார். என்னுடன் வந்தவர்கள், ‘இவ்வளவு தர்மசங்கடமான செய்தியை, எப்படி அவரிடம் துணிச்சலாகச் சொன்னீர்கள்?’ என்று வியந்தனர். நான் கூறினேன். “அவரைத் தலைவராகச் சந்திக்கும்போதெல்லாம் அவரைப் பார்த்து மலைத்துப் போய் சிலையாவேன். ஆனால், இன்றோ அவரைத் தாயாகப் பார்த்தேன்” என்றேன்.

தொடக்க உரையாற்றிய கலைஞர், சரியாக 13 நிமிடங்களில் மிகச் சிறப்பான அரிதான ஓர் ஆய்வுரை நிகழ்த்தினார். அதேபோல நிகழ்ச்சியை சரியாக 11.45 மணிக்கு முடித்து, அனைவரும் தலைவரை அன்போடு வழியனுப்பி வைத்தோம்.

அடுத்த நாள் நிறைவு விழாவிற்கு உரை நிகழ்த்த வந்திருந்த அண்ணன் துரைமுருகன் அவர்கள் என்னை அருகில் அழைத்து , “தலைவர் மூன்று நாட்களாய் உங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார். அவ்வளவு சிறப்பாக மாநாட்டை நடத்தினார் என்று பாராட்டினார்” என்றார்.

## ‘முரசொலி’ தலையங்கம்

என்னை அடையாளம் கண்டு, உயர்த்தியவர் கலைஞர்தான். 1997-ஆம் ஆண்டு, அக்டோபர் 2-ஆம் தேதி, நான் பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தராக அறிவிக்கப்பட்டேன். அடுத்த நாள் ‘முரசொலி’ தலையங்கத்தில் ‘குடத்திலிருப்போரை குன்றின் மேல் ஏற்றி வைத்தது!’ எனத் தலைப்பில் அதைப் பற்றி எழுதியிருந்தார் கலைஞர்.

**உயர்கல்வியில் கலைஞரின் எண்ணங்களை, இன்றைய ஆட்சி நிச்சயம் நிறைவேற்றும். ஏனென்றால், இது கலைஞரின் ஆட்சி.**

அன்று மரியாதை நிமித்தமாக பேராசிரியர், நாஞ்சிலார் என நான் சந்தித்து வாழ்த்துப் பெற்ற அனைவரும் “என்ன?. இன்றைய முரசொலியில் கதாநாயகனா?” என்று வாழ்த்தினர். நான் முரசொலியின் தலையங்கத்தை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தேன்.

அவர் என்னை இந்த உயரத்தில் ஏற்றி வைத்தமை எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. என்றாலும், அவர் என்னிடம் எத்தகைய சாதனைப் பணியை எதிர்பார்க்கிறார் என்பதை, எண்ணிப்பார்த்து மலைத்தேன். உறுதிகொண்டேன்.

## பல்கலைக்கழகத் தீர்வு

2006 ஆம் ஆண்டு மீண்டும் கழக ஆட்சி அமைந்தபோது, ‘அரசுக்குச் செலவின்றி புதிதாக பொறியியல் பல்கலைக்கழகங்கள் தொடங்க’ என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை திட்டக்குழுத் தலைவர் வழியாக அளித்திருந்தேன். அதில், அதற்கு முந்தைய ஆட்சியில், ஆங்காங்கே உள்ள பொதுப்பல்கலைக் கழகங்களின் கீழ் இயங்கி வந்த சுமார் 300 சுயநிதி பொறியியல் கல்லூரிகள் அண்ணா பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டதன் விளைவாக, கல்வித்துறையில் ஏற்பட்ட பல குழப்பங்களை விளக்கியதுடன், அதனால், அண்ணா பல்கலைக் கழகத்தின் உலகளாவிய தகுதி கேள்விக்குறியாகும் எனக் குறிப்பிட்டிருந்தேன்.

அந்தக் குழப்பங்களுக்குத் தீர்வாக திருச்சி, கோவை, நெல்லை போன்ற மையங்களில் அங்கே ஏற்கனவே உள்ள அரசு சார்ந்த ஒரு பொறியியல் கல்லூரியுடன், புதிதாக சேர்க்கப்பட்ட சுயநிதி பொறியியல் கல்லூரிகளையும் இணைத்து, நிர்வகிப்பதன் மூலம் நிர்வாக வசதியும், தரமும் காக்கப்படும் என்று அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன்.

அடுத்த சில நாட்களிலேயே சட்டமன்றக் கூட்டத்தில், திருச்சி. கோவை போன்ற இடங்களில் புதிய பொறியியல் பல்கலைக்கழகங்கள் தொடங்கப்படும் என்று அறிவித்ததுடன், அந்தப் பல்கலைக் கழகங்களை சென்னையில் உள்ளதைப்போலவே ‘அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி’,

‘அண்ணா பல்லைக் கழகம், கோவை’ என்பதுபோல பெயர் வைத்து யாரும் யோசிக்காத வகையில் தீர்வு கண்டார்.

இப்படியான நுட்பமான தீர்வுகள் கலைஞருக்கு இயல்பாக அமைந்த ஓர் ஆற்றல். அது தேவைப்படும் போதெல்லாம் ஒளிரும், பரவும்.

## உயர்கல்வியில் மூன்று நிலைகள்

2010-இல் ஒருநாள் மாநிலத் திட்டக் குழுவின் ஒரு கூட்டம். கல்வித்துறைப் பொறுப்பு உறுப்பினராக நான் சில கருத்துகளை எடுத்து வைத்தேன். தலைவர் உன்னிப்பாக கேட்டுக் கொண்டிருந்தார். உயர் கல்வியில் மூன்று படிநிலைகள் உள்ளன. அதில், உயர்கல்விக்கான வாய்ப்பு என்பது முதல் படிநிலை, அதில் நமது மாநிலம் பெரும்பாலும் தன்னிறைவு அடைந்துவிட்டது.

அடுத்த படிநிலையான தரம் வாய்ந்த உயர்கல்வியை அளிக்க, நாம் திட்டமிடவேண்டும். அது உலகளவிலான கல்வித் தரத்தில் இருக்க வேண்டும்.

உயர்கல்வி பயிலும் கணிசமான மாணவர்களின் இலக்கு பன்னாட்டு நிறுவனங்களாகவும், பன்னாட்டில் அமைந்துள்ள நிறுவனங்களாகவும் இருக்கின்றன. எனவே, அதற்கு ஏற்ப தகுதியைக் கற்பிக்கும் அளவிலான கல்வியைத் திட்டமிட வேண்டும்.

மூன்றாவது படி நிலை என்பது, தனித்தகுதி கொண்ட கல்விமுறையாக இருக்க வேண்டும். குறிப்பாக, ஹார்வர்ட், எம்.ஐ.டி, பெங்களூருவில் உள்ள ஐ.ஐ.எஸ்.இ. (IISE) என்பது போன்ற உயர் சிறப்புக் கல்வியை வழங்கத் திட்டமிடல் வேண்டுமென எனது கருத்துகளை முன்வைத்தேன்.

கலைஞர் உன்னிப்பாக என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தார். அந்தப் பார்வை எல்லாவற்றையும் சாத்தியமாக்கும் திறன் கொண்டது. ஆனால், காலம் அதற்கு வாய்ப்பு வழங்கவில்லை. ஆனால், உயர்கல்வியில் கலைஞரின் எண்ணங்களை, இன்றைய ஆட்சி நிச்சயம் நிறைவேற்றும். ஏனென்றால், இது கலைஞரின் ஆட்சி.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்** ....பகிர்வார்கள்

## ‘ஆளுநரை மாற்ற வேண்டிய நேரம் இது!’

தமிழக ஆளுநரின் பிடிவாதப் போக்கை உச்ச நீதிமன்றம் அம்பலப்படுத்திய நிலையில், அது தொடர்பாக ஆங்கில ஏடுகளில் வந்தவற்றை தமிழாக்கம் செய்து, முகநூலில் பதிவிட்டுள்ளார் எழுத்தாளர் சேகர் கோவிந்தசாமி.

‘தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியிடம் உச்ச நீதிமன்றம் எழுப்பிய விசாரணைக் கேள்விகள், அவர் வேண்டுமென்றே அரசியலமைப்பு கடமையை மீறியதை அம்பலப்படுத்தியுள்ளது. ஒரு மசோதாவின் தொகுப்புக்கு, முன்பு அவர் ‘ஒப்புதலை நிறுத்திவைத்தார்’, ஆனால், அது மாநில சட்டமன்றத்தால் இரண்டாவது முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், ஒப்புதல் வழங்க அரசியலமைப்பு ரீதியாகக் கடமைப்பட்டிருந்தார்.

ரவியின் செயல், இந்திய குடியரசுத் தலைவரிடம் மசோதாக்களை அனுப்பிவைப்பதன் சட்டபூர்வமான தன்மை, தொடர்பான கேள்விகள் எழுந்தன. மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டதால், அவை செயலிழந்து போயிருந்ததாகவும், அவற்றை ஆளுநர் ‘திருப்பி அனுப்பியதாக’ சட்டமன்றம் கருதியதாகவும், அவற்றை இரண்டாவது முறையாக நிறைவேற்றியதாகவும் அட்டர்னி ஜெனரல் வாதிட்டார். இது தொடர்பான ஒரு சர்ச்சையில், ஒரு மசோதாவைத் திருப்பி அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் வாதிட்டார். ஆனால், ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, சட்டமியற்றுவதைச் சீர்குலைத்து வருகிறார் என்பது கண்கூடு.

இந்த மசோதாக்களில் சிலவற்றின் மீது, ஓரிரு ஆண்டுகளாக அவர் நடவடிக்கை எடுக்கவில்லை அல்லது ஒப்புதலை நிறுத்தி வைக்கும்போது, முரண்பாடான அம்சம் குறித்து, தனது ஆட்சேபனைகளை வெளிப்படுத்தவில்லை. அத்துடன், மசோதாக்கள் இரண்டாவது தடவையாக அவரிடம் சமர்ப்பிக்கப்படும்போது அவர் சம்மதம் வழங்கக் கடமைப்பட்டிருப்பதை அவர் புறக்கணித்துவிட்டு, அவற்றை குடியரசுத் தலைவரிடம் ஒப்படைத்தார்.

2023-ஆம் ஆண்டு நடந்த விசாரணையில் கூட, ஓர் ஆளுநர், ஒப்புதலை நிறுத்தி வைக்கத் தேர்ந்தெடுத்த பிறகு, அதே மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்புவதன் மூலம் மற்றொரு விருப்பத் தேர்வைப் பயன்படுத்த முடியுமா என்று நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. அவர் பதவியில் நீடிப்பது அரசியல் சாசன ஆட்சிக்கு சவாலாக உள்ளது என்பதை ஒன்றிய அரசு கவனத்தில் கொள்ள வேண்டிய நேரம் இது” எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



**உடன்பிறப்புகளுடன் முத்தமிழறிஞர் கலைஞர்!**



இரா.திராவிடமணி

2001-ஆம் ஆண்டு கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், கழகப் பொதுச்செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களையும், கழகப் பொருளாளர் ஆற்காடு வீராசாமி அவர்களையும், சென்னையின் 45 -வது மேயராக இருந்த மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களையும் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. உடன் அன்று ஒன்றிய அமைச்சராக இருந்த அண்ணன் ஆ.ராசா மற்றும் புதுச்சேரி மாநில செயற்குழு உறுப்பினர் டாக்டர்.எம்.ஏ.எஸ். சுப்ரமணியன் எம்.எல்.ஏ., மற்றும் பல புதுச்சேரி மாநில உடன்பிறப்புகள் உடனிருந்தனர்.

**– இரா.திராவிடமணி, தொகுதிச் செயலாளர், முதலியார்பேட்டை தொகுதி, புதுச்சேரி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### வளமார் எமது திராவிட நாடு!

‘பராசக்தி’ படம் தயாரிக்கப்பட்ட நேரத்தில், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய, ‘வாழ்க, வாழ்கவே, வளமார் எமது திராவிடநாடு’ என்ற பாடலை அந்தப் படத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும்’ என கலைஞர் விரும்பினார். பாரதிதாசனிடம் அனுமதி கேட்டதும், மகிழ்ச்சியுடன் சம்மதித்துள்ளார். அதற்காக எவ்வளவு தொகை தர வேண்டும் என கலைஞர் கேட்டபோது, “அந்தப் பாடலை படத்தில் வைப்பதே எனக்குத் தருகின்ற பரிசுதான்” என்று பாரதிதாசன் மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

751

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No. 7436, TN/CH (C) 261/24-26 RNI No. 1244/57 WPP No. TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131